சிவமயம்

gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ங்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத. ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மாசி மீ உங உ (1947 மார்ச் 7 வெள்ளிக்கிழமை) [இல கூஉ

92

# சிவ வழிபாடு

(பிரமஸ்ரீ இ. ஞானசேகரக்குருக்கள்)

ஆன்மாக்கள் அடையும் பேறு அறம் பொருள் இன்பம் வீடு என நான்கு வகைப்படும். இந்நானினுள் வீடு சிறந்தது. வீடாவது பாசத்தைப் பற்றி நின்ற உயிர் அதனில் நின்றும் நீங்கி எக்காலத்தும் தன்னுடன் பிரிவின்றி அத்துவிதமாய்க் கலந்துநிற்கும் சிவபரம்பொருளையறிந்து அதுவாய் நின்று சிவானந்தத்தை அனுபவித்தல்; இப்பேறு சிவனருளாலன்றிக் கிடையாது. சிவனருளும் மலபரிபாகத்தாலன்றிச் சித்திக்காது மலபரிபாகமும் பசு புண்ணிய பாவங்களின் ஒப்பாலன்றி நிகழாது: பசு புண்ணிய பாவங்களின் ஒப்பு சிவனை வழிபடும் சிவபுண்ணியத்தால் நிகழும்; ஆகவே, வீட்டினையடைய விரும்புவோருக்குச் சிவவழிபாடு இன்றியமையாதது; அச்சிவ வழிபாடாவது சரியை, கிரியை, யோகம் ஞானம் என நான்கு வகைப்படும். அது தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப்படும்.

### சிவஞானசித்தியார்

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென்றுசங்கரனை, யடையுநன் மார்க்க நாலிவைதான் ஞானயோக நற்கிரியா சரியையென்று நவிற்றுவதுஞ், செய்வர்.

இங்ஙனமாக, சரியையின்றேல் கிரியையும், கிரியையின்றேல் யோகமும் யோகமின்றேல் ஞானமும், ஞானமின்றேல் சிவபெருமானது திருவடிப்பேறாகிய முத்தியுங் கைகூடாவாம். அதனாற்றான் அம்முத்திரசம்கொள்ளுதற்கு அவைசள்முறையே அரும்பு, மலர், காய், கனிபோலக் கருவியாய் நிற்கும் என்பதாம்.

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு, மரும்புமலர்காய்கனி போலன்றோ பராபரமே" என்பதாலறிக. (தாயுமானவர்)

தாதமார்க்கம் (சரியை) (க) ஆவது புறத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

இதின் உண்மையாவது இத்தேகத்தை மலச்சுமை எனவும், துக்கம் விளைக்கும் புன்குரம்பை எனவும் அநித்தியம் எனவும் கண்டு உண்டிசுருக்குதன் முதலியவற்றாற் தேகத்தை வெறுத்தலும், வேடத்தாலும், சிவோகம் பாவனையாலும் பிரசாதயோகம் செய்தலாலும, திருவேடமுடைய மெய்யடியாரையும் சிவலிங்கப் பெருமானையும் உண்மையாக உணர்ந்து வழிபடுதலுமேயாம்.

(உ)புத்திரமார்க்கம் (கிரியை)ஆவது புறத்தொழில் அகத்தொழில் என்னுமிரண்டானும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இதின் உண்மையாவது பிருதிவியாதி முப்பத்தாறு தத்துவங்களையும் நேதிகளைந்து பஞ்சசத்திகளையுஞ் செய்து தன்னை உள்ளபடி யறிதலாம்.

(ங) சகமார்க்கம்,(யோகம்)ஆவது, அகத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாம்; இதனுண்மையாவது, அங்ஙனந் தன்னையறிந்தவிடத்துத் தன்னுயிர்க்குயிராயிருந்த திருவருளைக் கண்டு, அவ்வருளே வடிவாகியிருந்து, முன் நீக்கி நின்ற கருவிகளோடுங் கூடாதிருத்தலேயாம்.

(ச) சன்மார்க்கம் (ஞானம்)ஆவது அறிவுத் தொழின் மாத்திரையானே உருவம், அருவுருவம், அருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையுங்கடந்துநின்ற, அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பான சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடாம்; இதனுண்மையாவது, அஞ்ஞானிகட்கு மருண் மேலீட்டினாலே சிவம் முற்றும் தோன்றப்பெறாது பிரபஞ்ச வாசனையோடு நிற்கு நிலைபோல, சிவஞானிகள் அருண்மேலீட்டினாலே பிரபஞ்ச வாசனையும், அவ்வருளே வடிவாயிருந்ததானுஞ் சிறிதும் தோன்றப்பெறாமல் பரையே ஆகிய வேறின்மையினையும் அதன்மேற் பேரின்பம் விட்டுத் தோன்றாத மேலீட்டினையும், இவ்வின்பத்தைப் பெற்றோமென்னும் பேறின்மையினையும் பெற்றுச் சிவத்தோடு அத்துவிதமாய் நிற்றலேயாம்.

இங்ஙனமாக, கிரியைகளிற் பயனில்லையென அவற்றை யிகழ்ந்து ஞான முத்தியடைய விரும்புவோர், ஆகாயத்தினின்றுந் தோலையுரித்துடுக்க விரும்பினோரையும், படிவழியேறிச் செல்லாது கீழ்நின்று மலையினுச்சிக்குப் பாய விரும்புவோரையும் போன்றவர்களாய், அதோகதி எய்தப்பெறுவார் என்பது உண்மைநூற் றுணிபேயாம்.

இவ்வண்ணமிருத்தலால்,வீடடைய விரும்பினோர். புறத்தும் அகத்தும் சிவபெருமானை வழிபடல் அத்தியாவசியகமேயாம். சிவபெருமான் புறத்தே திருக்ஷேத்திரங்களிலுள்ள ஆலயங்களில் இருக்கும் சிவலிங்க முதலிய திருமூர்த்தங்களையும், மெய்யடியாரது திருவேடங்களையும், ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும் இவ்வுலகராற் செய்யப்படும் வழிபாட்டையேற்றருள்செய்வார். ஆகலால் புறத்தேயுள்ள ஆலய வழிபாடானது அத்தியாவசியமாகின்றது. நாள்தோறும் உள்ளும்புறமும் பரிசுத்தமுடையராய் முதற் கடவுள் சிவபெருமானே எனத் துணிந்து, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிலே விதித்தபடி சிவாலயத்திற் சென்று தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்திற்கும் ஏற்ப கடவுளை மெய்யன்போடு வழிபடுவோர்களே சைவசமயிகள் என்று சொல்லப்படுவார்கள்.

(வரும்)

## உதவி வித்தியாகர்த்தர்

ஸ்ரீ கே. எஸ். அருள்நந்தி உதவி வித்தியா கர்த்தாராக இலங்கை மந்திரசபையால் நியமிக்கப்பட்டதைக் குடியேற்றநாட்டு மந்திரி ஊர்ஜிதம் செய்துவிட்டார்.

# தொடங்குகிறது!

## வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டம் இப்போது ஆரம்பமாகிவிட்டது. கேகாலைப் பகுதியில் உள்ள காதர்துப்பனை என்னும் தோட்டத்தில் உள்ள தொழிலாளரில் 167 பேர்க்கு வேலையைவிட்டும் போகும்படி அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அறிவித்தல்கொடுக்கப்பட்டவர்கள் அனைவரும் சிங்களத் தொழிலாளராம். இந்தியத் தொழிலாளர்க்கு அறிவித்தல் கொடுக்காமல் தமக்கு மாத்திரம் அறிவித்தல் தந்தமை பிழையென்று அச்சிங்களத் தொழிலாளர்கள் முறையிடுகின்றனர்.

றபர் விலை வீழ்ச்சியடைந்தமையினாலே வேலையைக் குறைக்கவேண்டி ஏற்பட்டதென்றும், தற்காலிகமாக அமர்த்தப்பட்ட சிங்களத் தொழிலாளரை முதலில் நீக்கிய பின்னரே, நிரந்தர வேலைக்காரான இந்தியத் தொழிலாளரை நீக்குவது யோசிக்கப்படும் என்றும் மேற்படிதோட்டத்துரை அறிவிக்கிறார்.

# 200 பேர்!

## ஐக்கிய தேசீயக்கட்சி அபேட்சகர்

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாக, பாராளுமன்றத் தேர்தலில் முன்வர 200 பேர்வரை முற்பட்டிருக்கின்றனர். ஆனால் 86 ஸ்தானங்கள்தான் உண்டு. இந்த 200 பேரில் 86 பேரை எப்படித் தெரிவு செய்வது என்று கட்சிஅதிகாரிகள் விழிக்கின்றனராம்.

கட்சியின் அபேட்சகராகத் தெரிவு செய்யப்படாதவர்கள், கட்சியினின்றும் விலகி, தனிப்பட்ட முறையில் தேர்தலுக்கு நிற்பாராயின், ஐக்கிய தேசியக்கட்சியிற் பிழவு ஏற்பட்டு அது பங்கமுறும் என்று அரசியல் வாதிகள் பேசிக்கொள்ளுகின்றனர்.

# தொண்டுசெய்வோம்

1 இந்து மதத்திநுக்கே — நாங்கள் ஏற்ற பணி புரிவோம்
சொந்த மதம் வளர — மனச் சோம்பலில் லாதுழைப்போம்.
2 மற்றை மதத்தினர்கள்—நம்மை மயக்கி யிழுப்பதனைக்-கண்டும்
சற்றும் உணர்ச்சியின்றிக்—காலம் தாழ்ப்பது நன்றோமோ?
3 தெய்வநிலை சேர்க்கும்-மதத்தைத்தீயநிலைக்குவைத்தார்-மக்கள்
உய்வதற் காமதத்தை—இந்த உலகினுக் காக்கி விட்டார்
4 இந்து மதத்தினரில்—மிகவும் ஏழ்மையுடையவரை - உலகில்
நொந்து திரிபவரை—மதிப்பு நோக்கி யுழல் பவரை
5 கைப்பொருளைக் கொடுத்தும்—மற்றைக்காட்சியில்
வஞ்சஞ்செய்தும் - இன்னும்
எப்படியாயேனும் - மக்களை ஈர்த்திழுக் கின்றார்கள்
6 தூங்கியதும் போதும்—மேற்கொண்ட சோம்பலும் போதுமினி
உலகில்
நாங்களே வீரரென—மதத்தை நாட்டிடத்தொண்டுசெய்வோம்
—"தொண்டன்"

# இந்தியா விலகிய பின்

## திருக்கோணமலையைப் பலப்படுத்த ஏற்பாடு

அடுத்தஆண்டு ஜூன்மாதத்துடன் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறப்போவதால், அதற்கிடையில், அவர்கள் தம் கிழக்குப்பகுதி அரண்களையெல்லாம் பலப்படுத்த இப்போது நிச்சயித்திருக்கின்றனர்.

இவ்விஷயமாகப் பிரிட்டிஷ் கடற்படையதிகாரிகள் திருக்கோணமலைக் கடற்படைத் தலத்தை இன்னும் அதிகமாகப் பலப்படுத்தப்போகின்றனர் என்று லண்டன் செய்திகள் கூறுகின்றன.

உலகின் சிறந்த 6 கடற்படைத் தளங்களில் திருக்கோணமலைத் தளமும் ஒன்று; திருக்கோணமலைச் தளமே, இனிக் கிழக்குப்பகுதிப் பிரிட்டிஷ் படையின் பிரதான தளமாகவிருக்கும்.

மின்னேரியா, சீயகிரி என்னும் இரு இடங்களில், பிரிட்டிஷ் இராணுவத்தினர் இரு சிறந்தவிமானத்தளங்களையும் யுத்தகாலத்தில் நிருமாணித்திருந்தனர். இத்தளங்கள் இப்போதும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் பொறுப்பில் இருந்தபோதிலும் அவை உபயோகமற்றுக் காடுவளர்கின்றது. இந்தத் தளங்களையும் திருத்தி உபயோகிக்க இராணுவ அதிகாரிகள் நிச்சயித்திருக்கின்றனர்.

## 60,000 தொன் அரிசி

எகிப்தில் இப்போது 100,000 தொன் அரிசி மேலதிகமாக இருக்கிறதாம். இதில் 60,000 தொன் அரிசியை இலங்கைக்கு அனுப்ப சர்வதேச உணவுச்சபை ஆலோசிக்கிறது என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஷு
மாசிமீ உ௩ உ வெள்ளிக்கிழமை

## சைவப் பெண்கள் கலாசாலையிற் கல்விகற்பிக்கும் முறை

### III

ஆனதாற் கணவனுக்கு இனியவளாய் இத் தமிழ் மனைவி நடக்கவேண்டுமானல், சிறுபிராயத்திற்றனே, அவள் தன் சாதி சமயங்கட்குரிய ஒழுக்கங்களையுங் கொள்கைகளையும் முறைகளையும் நன்கு பயின்றிருத்தல் வேண்டும்; மேலும் கணவன் பொருளீட்டும்வண்ணம் வேற்றுரைகட்குச் சென்று அங்கே சஞ்சரித்து, பல பேதமான கொள்கையுடையோருடன் ஊடாடி, அவர்களுடைய கொள்கைகள் விபரீத பழக்க ஒழுக்கங்களையும் பற்றிக்கொண்டு, தன்னூருக்கு மீண்டுவருவான்; அப்படி வரும்போது அவன் பழகிய சில பழக்கவழக்கங்கள் கொண்டகொள்கைகள், பழையகொள்கைகளோடும் பழக்கங்களோடும் முரண்படும்போது நற்பெண்டிராயுள்ளவள் இதமாகச்சொல்லித் தன் கணவனைத் திருந்தி நடக்கச் செய்வாள். மேலும் தகப்பன், மேலேயெடுத்துக்காட்டப்பட்டவாறு பிழைப்பின் பொருட்டு வேற்றூருக்குப் போய்ச் சஞ்சரிக்க, பிள்ளைகள் அவர்களுள்ளுஞ் சிறுபிராயத்தினர் பெரும்பாலும் பெற்றதாயுடனேயிருப்பது இயல்பாகும்; இச்சிறு பிள்ளைகட்கு நல்ல பழக்கவழக்கங்களையும் தெய்வந் தொழுதல் ஆலயவழிபாடு என்னுமிவைகளையும் தாயே பயிற்றிவைக்கும் பொறுப்புப் பூண்டவளாகின்றுள்; உபாத்தியாயராக தகப்பனுக, தாயாக, தம்மிடத்தில்லாத கொள்கைகளையும் பழகிக்கொள்ளாத நற்பழக்கங்களையும் ஆசார ஒழுக்கங்களையும் தம் பிள்ளைகட்குப் பயிற்றுதல் முடியாதாகும்; பிள்ளைகளுள் ஆண்கள் பெரும்பாலும் தந்தையைப் பின்பற்றியும், பெண்கள் பெரும்பாலும் தாயைப் பின்பற்றியும் நடக்க முயலுதல் இயல்பாகும்; இதனுலேயே தந்தையைப்போல் மைந்தன், தாயைப்போற் பிள்ளை, நூலைப்போற் சீலை யென்ற பழமொழிகள் வழங்குகின்றன; இவ்வாறு தாயரைப் பார்த்துப் புதல்வியர் நடக்கப் பயில்வதால் தாயரிடத்திலே தூய ஒழுக்கமும் பழக்கவழக்கங்களும் முந்தியே பொருந்தியிருக்கவேண்டியவையல்லவா; அன்றியும் பிள்ளைகள் குறும்பு செய்து, அதனல் ஏசப்படும்போது ஏசுவோர் தந்தையை யிழுத்து ஏசாமல் தாயை யிழுத்தே.....மகன் என்றும்......பிள்ளை என்று ஏசுவதைக் கேட்கின்றேம்; இவற்ருல் தந்தையைக் காட்டிலும் பெற்றதாய்க்கேபிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு அதிகமென்பது பெறப்படலாயிற்று; அப்படியான தாய் திறம்பாப்பழக்கவழக்கஒழுக்கம் பூண்வளாயிருக்கும்வண்ணம்அவளுக்கு இளமையில் ஊட்டப்படுங் கல்வியும் எங்கள் சாதிசமயம்தேசம் பாஷையென்னு மிவற்றேடு முரண்படாதாகவே இருக்க வேண்டு மென்பதைத்தான் மீண்டும் மீட்டும் புலப்படுத்துகின்றேம்.

பெண்பிள்ளைகள் கல்விபயிலும் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலுமுள்ள ஆசிரியர்களும் அதிபர்களும் உடனே தவிர்க்க வேண்டிய சில பிழையானமுறைகளை இங்கே எடுத்துக் காட்டுகின்றேம்.

மாணவிகள் தங்கள் பள்ளிக்கூடத்தில் நடக்குங் கூட்டங்களிலாக, வேறு எவ்வகையான கூட்டங்களிலாக, நாடகம் நடித்தல், நாடகங்களையும் படக்காட்சிகளையும் பார்க்கப்போதல், ஆண்பாலாராகிய மாணவர்களிடத்திற் கூச்சமின்றி ஊடாடுதல், “கார்ணிவல்” எனப்படும் விபரீத கொண்டாட்டத்தில் எவ்வகையான தொடர்பும் வைத்திருத்தல், விடுமுறை நாட்களிற் கீரிமலை போன்ற இடங்களுக்குப் பொழுதுபோக்கும் வண்ணம் போதல், இன்னும் இவை போன்ற தீமைகளெளவைகளோ அவைகளிற் பெண்மாணவர் பிரவேசிக்க வொட்டாது அவர்களைத் தடுத்தல் பிரதானமாக அவ்வக் கலாசாலையிற் கல்வி பயிற்றும் ஆசிரியைகளதும் வித்தியாசாலை யதிபர்களதுங் கடனுகும். சங்கீதம் பயிலும் விஷயத்திலும் பெண்பிள்ளைகள் முறையான சங்கீதத்தைச் சங்கீத மறிந்தபெண் உபாத்தியாயரிடத்திலேனும் கல்வியறிவொழுக்கம் முதலியவற்றேடுகூடிய முதியசங்கீத வித்துவான்களிடத்தேனும் பயின்றுகொள்ளுதல் உத்தமம்; அப்படிப் பயிலுஞ் சங்கீதமும் தேவார திருவாசகங்கள் திருப்புகழ் முதலிய தோத்திரங்களையும் தெய்வத்தின் பேரிற் பெரியார் பாடிய கீர்த்தனங்களையும் படித்தற்குப் பயன்படல் வேண்டும்; சைவத்தமிழ்ப்பெண்பிள்ளைகட்குக் கல்வியூட்டும் முறையில் இங்கே எடுத்துக்காட்டப்படாத ஏனையவற்றையும் ஆசிரியர்கள் தக்கவாறு ஆராய்ந்து அறிந்து செய்க.

---

## 87,000 கையொப்ப மநு

புதிய கல்வித்திட்ட மசோதாவை இரண்டாம் முறையாகக் கல்வி மந்திரி கன்னங்கரா நேற்றைத்தினம் அரசங்க சபையில் எடுத்தாண்டார். அம்மசோதாவுக்கு விரோதமாக 87,058 பேரின் கையொப்பம் கொண்ட ஓர் மநுவை திவான் பகதூர் ஐ. எக்ஸ். பெரீரா சமர்ப்பித்தார்.

---

## ஆங்கில – பிரிட்டிஷ் உறவு

பிரிட்டிஷ் பிரதம தளகர்த்தர் மொன்ற்கோமெரிப்பிர்புஇந்திய இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மவுன் பேற்றன் பிரபு என்பவர்களுடன், எதிர்காலத்தில் ஆங்கில - இந்தியா உறவு எவ்வாறிருக்கவேண்டும் என்பது பற்றி பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிகிறது.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—7)

### கல்லா வொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதர்போ லும்மே

‘சாமி, நீங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை; ஆனல், ஒன்று சொல்லுகிறேன்; குறையெண்ணுதீர்கள்: இந்தச் சாதியென்பதிலுள்ள உயர்வு தாழ்வும், கட்டுப்பாடுகள், தீண்டுதல் தீண்டாமை முதலான பழையகொள்கைகளெல்லாம் இந்தக் காலத்திலே தேய்ந்து வருகின்றன; அதிக காலம் போகவேண்டியதில்லை; இன்னுஞ்சில வருடங்களில் இவைகளெல்லாம் அறவே இல்லாமற் போய்விடுமென்பது தான் என் நம்பிக்கை: அயல்நாடாகிய இந்தியாவில் இப்பொழுது நடப்பவற்றைப் பாருங்கள்; உயர்ந்தசாதியார் தாழ்ந்த சாதியாரென்னு மிவர்கள்தமக்கிடையேகலப்பு மணஞ்செய்யத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; அங்கே சாதிபேதம் பாராட்டுவதை மெல்லமெல்லக் கைவிட்டு வருகிறார்கள்; சமாசனம், சமபோசன மென்னுமிவைகளும் இப்பொழுது நடக்கத் தொடங்கிக்கொண்டன; சபைகள், சங்கங்கள், கூட்டங்களென்னுமிவைகளிலே உயர்ந்தவர்,தாழ்ந்தவர் என்ற பேதம் பார்ப்பதில்லை; அங்கே கல்வியறிவு திறமை யென்னுமிவைகளைப்பற்றிச் சிந்தித்து, இவைகளிற் சிறந்தவர்களையே அச்சபை சங்கங்கட்குத் தலைமை வகிக்கச் செய்கிறார்கள்; அவர்கள் செய்வதும் நியாயந்தானே; “எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடிக் கற்றேரை மேல்வருகென்பர்” எனவும், “கல்லாவொருவன் குலநலம் பேசுதல், நெல்லினுட் பிறந்த பதர்போ லும்மே” எனவும்தானே பெரியோரும் பாடியிருக்கின்றார்கள்: சாமி, இப்படியான சீர்திருத்தங்கள் பல இந்தியாவில் தோன்றியிருக்கின்றன; பொதுக்கிணறுகளிற் சாதிபேதமின்றி எல்லாரும் தண்ணீரள்ளிக் குடிக்கலாம்; மடங்கள் சத்திரங்கள் வாசகசாலைகள் முதலிய பொதுத் தாபனங்களில் எல்லாரும் போய் ‘ஏகபோகமாக’ச் சஞ்சாரஞ் செய்யலாம் என்ற திருத்தங்களும் அந்த நாட்டிலே இக்காலத்தில் நடைபெறலாயின: சாமி, இவைகளெல்லாவற்றைக் காட்டிலும் சிறந்த ஒரு சீர்திருத்தம், இந்து சமயத்தை எங்கும் பரவச் செய்வதற்கும், இந்துக்களென்றிருப்பவர்கள் அந்நிய மார்க்கங்களிற் பிரவேசிக்காமற் செய்தற்கும் கைகண்ட வழியாகவுள்ள தீண்டாதார் ஆலயப் பிரவேசமென்ற முயற்சி இப்பொழுது இயக்கத் தொடக்கம் கன்னியாகுமரி ஈறுகப் பரதகண்டம் முழுவதிலும் செய்யப்பட்டு வருதலை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்; பத்திரிகைகள் மூலமாகப் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இப்படிக் கணந்தோறுங் காலம் மாறிவரும்போது விநாயகமூர்த்தி குடும்பத்தினர்இன்னமும் தாங்கள்சாதிமரபிலேசிறந்தவர்களென்று வாய்ப்பறை யறைந்துகொண்டிருப்பதனல் வரவிருக்கும்பயனென்ன சாமி; ஆனதால்,நீங்கள் தயவுசெய்து என்பொருட்டு அவர்கள் வீட்டிற்குப் போய் இந்த நியாயங்களையும் எடுத்துக்காட்டி அந்தச் சம்பந்தத்தை எனக்கு ஒழுங்கு செய்து வைக்க வேண்டும் சாமி; நீங்கள் செய்யும் நன்மையை நான் ஒருபோதும் மறவேன்” என்று சொல்லிப் புரோகிதரை வேண்டினுன் விஜயரத்தினம்.

ஊரோடுகில் ஒக்க ஓடு

புரோகிதர் இவைகளை யெல்லாங் கேட்டுச் சற்றுநேரம் யோசித்துவிட்டுப் பின்னர் விஜயரத்தினத்தைப் பார்த்து, தம்பி, நீர் சொல்வன நிசமேல்லாம் நாம் பத்திரிகைகளிற் படித்தும் வருகிறேம், கேள்விப்பட்டும் வருகிறேம்; உலகத்திலே காலத்திற்கொப்ப மாறுதல்கள் உண்டாதலுஞ் சகசந்தான்; ஆனல் இந்த மாறுதல்களினுலே இந்தியாவிலாக, இந்த நாட்டிலாக, இந்தச் சாதிமரபென்ற கொள்கை அறவேயழிந்து போய்விடுமென நாம் எண்ணிக்கொள்ளவொண்ணுது; இக்காலத்திலே சாதிமரபுப் பேதம் பார்க்கிறார்களில்லை, பார்க்கவேண்டியதில்லையென்ன் இந்தநேரத்தில் எமக்குச் சொல்லிக்கொண்டிருந்தீரே, விநாயகமூர்த்தி குடும்பத்தில் ஒரு பெண் கொள்ளவேண்டுமென்றும், அப்படியான பெண்ணை அக்குடும்பத்திலே நாமே ஒழுங்குசெய்து வைக்கவேண்டுமென்றும் எம்மைக் கேட்கின்றீர்: சாதிமரபு வித்தியாசம் பார்க்கவேண்டியதில்லையானல், விநாயகமூர்த்தி மரபுப் பெண்ணை விடுத்து இன்னுஞ் சிறந்த சீதனத்தோடும் மற்றைய சிறப்புக்களோடுமுள்ள ஒரு கன்னிகையைத் தேடி மணஞ்செய்துகொள்ளலாமே; ஆனதனுற்றுன் தம்பீ, சொல்லுகிறேமென்று குறைபாய் விளங்காதீர்; இந்த நாட்டிலேயுள்ளவர்கள் பேச்சளவிற் காலத்திற்குத்தக்கபடி எதும் பில்லா நாவால் எதனையும் பேசிக்கொள்ளுவார்கள்; செயலளவில் தாங்களும் பழைய ஏட்டையெடுத்துப் படிக்கத் தொடங்கிவிடுவார்கள்; எங்கள் பிராமணச் சாதியினராக உங்கள் வேளாண் சாதியினராக, வேறு எச் சாதியினராக, பாரம்பரியம் தொன்மையென்னு மிவைகளில்லாதவர்களும் தமக்குரிய வருணச்சிரம சருமத்தை அநுட்டித்தலின்றி இடையிட்டுச் செல்வம் அதிகாரம் படைத்தவர்களுமே ஒரு அளவிற்குச் சாதியெது, குலமெது, மரபென்ன,பாரம்பரிய மென்னவென்று குதர்க்கம் பேசி இயலுமானுல் அடாத கருமங்களையுஞ் செய்யத்தலைப்படுவர்; மூதாதையர்கள்கொண்டகொள்கைகளெல்லாம் மூடக் கொள்கைகள்; அவர்கள் கொண்டுள்ள தெய்வ நம்பிக்கை கிரியை நம்பிக்கையாய இவைகளெல்லாம் குருட்டு நம்பிக்கையென்றும் சொல்லிக்கொண்டு தாம் ஒன்றிலும் நம்பிக்கையற்றாராய் அந்தரத் தாமரைபோல்நிலையற்றுச் சலனமுற்றிருக்கிறார்கள், இக்காலத்திலே தம்மைப் படித்தவரென்று தாமே யெண்ணியிருக்கும் வாலிபர் பலர், தலையிருப்ப வால் ஆடத் தலைப்பட்டவாறு அறிவின் முதியோர் பலர் இருப்ப, அவர்களுடன் கலந்து யோசித்தலின்றி, அவர்களையும் பொருட்படுத்தாமல்—பிந்தி மூளைத்தவர்களாகிய இந்த இளைஞர்—விளைக்கும் அநர்த்தங்கள் பலவாகும்; ஆனதால் எந்தக் கருமத்தையும், எந்தக் கொள்கைகளையும் எங்கள் சாத்திரங்களோடு பெரிதும் முரண்படாது கற்றேர்கள் முதியோர்களென்னு மிவர்களோடு உசாவிச் செய்தலே புத்தியின்பாற்படுமென்பது எமது நம்பிக்கை; ஊரோடுகில் ஒக்கவோடு, ஒருவனேடுகிற் கேட்டோடு” என்பது பழமொழி தம்பீ: அல்லாமலும், இந்தியாவிலே பல மாறுதல்கள் நடப்பதனுல் எங்கள் நாட்டிலும் அந்த மாறுதல்கள் நடந்தே தீரவேண்டுமென்ற நியதியில்லை; சீர்திருத்தங்களைச் செய்யும் போது எங்கள் சாதிசமயம்தேசாசாரம் பாஷை யென்னுமிவைகட்கு இயன்றவரையிற் பங்கம் வராமற் பார்த்துக்கொண்டு கருமஞ் செய்யத் தொடங்குதல் வேண்டும்; எங்கள் சமயத்திற்கும் சாதிக்கும் அடிப்படையாகவுள்ள ஆதாரங்களை மாற்ற முயன்றுல், அவற்றைப்பங்கப்படுத்த நினைத்தால், இந்நாட்டிலுள்ள தமிழ்ச் சாதியார் சைவசமயத்தாரென்றிருப்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வித் திட்டம்

## சமயக்கல்வியை நசுக்குவதுலட்சியம்?

புதிய கல்வித்திட்ட மசோதாவைக் குறித்து ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளுவதற்காக 3-3-47 மாலை யாழ்ப்பாணம் சென்ட் மேரி தேவாலய மைதானத்தில் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் ஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது. எல்லா வகுப்புகளையும் சேர்ந்த ஏராளமான சனங்கள் இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தார்கள்.

அரசாங்க உதவிபெற்ற மத ஸ்தாபனப் பள்ளிக்கூடங்கள் புதிதாகத்திறக்கப்படுவது கல்விச் சட்டத் திருத்த மசோதாவில் தடை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த விதியை ஆட்சேபித்து ஒரு தீர்மானத்தை ஸ்ரீ எஸ். ராஜரத்தினம் பிரேரித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"பிரிட்டிஷார் இலங்கையைஸ்வீகரித்த நாள் முதற்கொண்டே மத ஸ்தாபனங்கள் இங்கு பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து நடத்த அனுமதிக்கப்பட்டு வந்துள்ளன. எல்லா மத ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களாக்கப்பட வேண்டுமென்றும் அரசினர் பள்ளிக்கூடங்களாயில்லாதவைகளுக்குப் பண உதவி செய்யக்கூடாதென்றும் மிஸ்டர் ஈவான்ஸ் 1919ம் ஆண்டில் ஒருயோசனையைக் கொண்டுவந்தார். அதை அகில இலங்கையும் அழுத்தமாகக் கண்டித்தமையால் அந்த யோசனை கைவிடப்பட்டுவிட்டது. சுமார் 70 அல்லது 80 பௌத்தமதப் பள்ளிக்கூடங்களுக்கு மனேஜராயிருந்த திரு. எச். டபிள்யூ. அமரசூரியா எதிர்காலத்தில் அரசினர் மட்டும்தான் புதிய பள்ளிக்கூடங்களைத் திறக்கலாமென்றும், இந்த உரிமை மத ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களுக்கு இருக்கப்படாதென்றும், அரசாங்க சபையில் ஒருதீர்மானத்தைக் கொண்டுவந்தார். சொற்ப வாக்குகளால் அந்தத் தீர்மானம் நிறைவேறியது. அந்தத்தீர்மானத்தை இப்பொழுது புதிய கல்விச் சட்டத்தில் ஒரு விதியாகப் புகுத்த அரசினர் இன்று முயற்சி செய்கிறார்கள்.

"மதம் என்பது நமது பிறப்புரிமை. நாம் விரும்பும் பள்ளிக்கூடங்களில் நமது குழந்தைகளைப் படிக்கவைக்க நமக்குப் பூரண உரிமையுண்டு. பள்ளிக்கூடங்களுக்கு மான்யமாக அரசினர் அளிக்கும் பணம் பொதுஜனங்களுடைய பணம்தானென்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. மந்திரிசபைக்குச் சொந்தமான பணமல்ல இது. புதிய பள்ளிக்கூடங்களைத் திறக்கும் உரிமையை மத ஸ்தாபனங்களுக்கு மறுப்பதின்மூலம் மத ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களையே படிப்படியாக நசுக்கிவிட முயற்சி செய்யப்படுகிறது. இந்தமுயற்சியைத் தன்மதிப்பும் மதப்பற்றுமுடைய ஒவ்வொருவரும் கடுமையாகஎதிர்க்கவே செய்வார்கள்.

"கல்வி வளர்ச்சிக்கு மதஸ்தாபனப் பள்ளிக்கூடங்கள் இன்றியமையாதவை. அவைகளைப்போல அவ்வளவு திறமையுடன் அரசினர் பள்ளிக்கூடங்கள் வேலைசெய்ய முடியாது. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம்.

பொதுஜனங்களுக்குத் தலைவர்களாயிருந்து அவர்களுடைய குறைகளை எடுத்துரைத்துக் கிளர்ச்சி செய்யக்கூடியவர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்கள். அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் அதிகார பதவிகளிலிருப்பவர்களின் பிரசார முகாம்களாயிருப்பதை நாம் தடை செய்யவேண்டும்"

ஸ்ரீ ஏ. ஆர். சுப்பிரமணியம் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் கல்வியபிவிருத்திக்காக இலங்கையிலும் பொதுவாகக் கீழ்த்திசை நாடுகள் எல்லாவற்றிலும் மத ஸ்தாபனத் தலைவர்கள் செய்துள்ள சேவைகளை விரிவாக எடுத்துச் சொன்னார். தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"அரசினரின் தற்போதைய யோசனையில் மேலாழ்ந்தவாரியாகத் தென்படும் ஆபத்தைவிட இன்னும் அதிக ஆபத்து இருக்கின்றது. மத ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களை ஒழித்து அவற்றை இன்று அரசினர் பள்ளிக்கூடங்களாக்குகிறார்கள். அரசினர் பள்ளிக்கூடங்கள நாளை பௌத்த மதப் பள்ளிக்கூடங்களாக மாற்றப்படும். மகாத்மா காந்தியைப் போன்ற ஒரு தலைவர் இலங்கையில்இல்லாததுதான் இலங்கையின் பிரச்னைகளுக்கெல்லாம் மூலகாரணமென்று நான் கருதுகின்றேன். உண்மையான கல்விக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களினால் மட்டுமே கல்வியபிவிருத்திக்குச் சேவைபுரிய முடியும்."

காதி எஸ். எம். அபூபக்கர், செவாலியர் எஸ். அருளானந்தம் முதலியோர்களும் பேசியபின் தீர்மானம் பலத்த மரகோஷத்துடன்நிறைவேறியது.

# வேலையின்மை!

## போக்க அரசாங்க முயற்சி

யுத்தகாலத்தில், பல புதிய அரசாங்கப் பகுதிகள் ஸதாபிக்கப்பட்டன. இவற்றில் உத்தியோகம் வகிக்கப் போதிய வாலிபர் இன்மையால் உபகாரவேதனம் பெற்று இளைப்பாறியுள்ள பல உத்தியோகத்தரை அப்பதவிகளில் அரசாங்கம் அமர்த்தியது. இப்போது காலம் மாறிவிட்டது. யுத்தசேவையில் ஈடுபட்டுள்ள அநேக வாலிபர் இப்போது வேலையற்று இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டும். ஆகவே, அரசாங்க உத்தியோகங்களில் உள்ள 'பென்ஷன்"காரரை அகற்றி, அந்த இடங்களில், வேலையற்றுள்ள வாலிபர்களை அமர்த்த வேண்டும் என்ற கொள்கையை அநுட்டிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அரசாங்கப் பகுதிகளில் அதிகமாக நிகழும் இன்னொரு ஊழல், உயர்தர அதிகாரிகளின் கவனத்தை இப்போது ஈர்த்திருக்கிறது அதாவது, தற்காலிக பதவிகளில் உள்ள சில உத்தியோகத்தர், மேலதிகமாக எவ்வித வேலையும் செய்யாமல், மேலதிக வேதனம் பெறுவதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் இப்படியான ஊழல் அதிகமாக உள்ளதாம்: இந்த உணவுக் கந்தோர்களில் உள்ள லிகிதர்மார் சிலர், ஞாயிற்றுக்கிழமைகளில், எவ்வித அரசாங்க வேலையும் செய்யாமல் இருந்துவிட்டு, தாம் வேலை செய்ததாகச் சொல்லி அதிகப்பணம் பெற்று வருகிறார்களாம். இப்படியான ஆபாசங்களைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நிச்சயித்திருக்கிறார்கள்.

# பயிர்ச் சேதம்!

## ஸ்ரீமகாதேவா இடங்களைப் பார்வையிட்டார்

சென்றவாரமும் அதற்கு முன்னரும் நிகழ்ந்த பெருமழை காரணமாக யாழ்ப்பாண மெங்கணும் பெரும் பயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் வெள்ளத்தின் காரணமாக அறுவடை செய்ய முடியாமல் விட, நெற்கதிர்கள் கீழேவிழ்ந்து, பல இடங்களில் முளைத்துவிட்டன. ஊரவர்களும் ஸ்தல அதிகாரிகளும் இவ்விஷயமாக மேலதிகாரிகட்கு முறையிட்டனர்.

சென்றவாரம் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மகாதேவா, மாகாணத் தலைவர் மிஸ்டர் பீ. ஜே. ஹட்ஸனுடன், தென்மராட்சிப் பகுதியில் நாவற்குழி மறவன்புலோ, தனங்கிழப்பு முதலாம் இடங்களுக்குச் சென்று அங்கு நிகழ்ந்த பயிர்ச்சேதங்களைப் பார்வையிட்டார்.

இப்படியாக நிகழ்ந்துள்ள சேதம் காரணமாக அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய நெல்லை இம்முறை கொடுக்க முடியாது என்றும், இவ்விஷயத்தில் ஸ்ரீ மகாதேவா உதவிபுரிய வேண்டும் என்றும் ஊரவர்கள் மந்திரியைக் கேட்டுக் கொண்டனர்.

நெல் அறவிடும் சட்டம் அரசாங்க சபையினால் நிறைவேற்றப்பட்டது. ஆகவே, அதனை நீக்குதற்குத் தனிப்பட்ட எந்த அதிகாரியாலும் முடியாது. ஆனால் ஊரவர்கள் தனித்தனி தம் குறைகளை மாகாணத்தலைவர்க்கு அறிவித்து எழுதினால், அவர் ஏதும் சகாயம் செய்யலாம் என்று ஸ்ரீமகாதேவா கூறினார்.

ஸ்ரீ மகாதேவா, அரியாலை செம்மணி சிவியாதெரு முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்து அங்கு நிகழ்ந்துள்ள சேதங்களையும் பார்வையிட்டார்.

# வருமான வரிக்குத் தப்புவோர்

## அகப்படுத்த அரசினர் முயற்சி

யுத்தம் நடந்த காலத்திலே, இந்த இலங்கையில், ராணுவப்பகுதியினர்க்கு ஒப்பந்தத்தில் வேலைசெய்துபலர் குபேரசம்பத்துப் படைத்திருக்கிறார்கள், இவர்களிற் பலர், தம் பண நிலைமைபற்றிய அறிக்கையை வருமானவரிப் பகுதிக்கு இதுவரை சமர்ப்பிக்கவில்லை. இதன் பயனாகப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள், வருமானவரிப் பகுதிக்கும் கிடைக்கவில்லை. இவர்களைக் கண்டிபிடித்துப் பணம் அறவிட வருமானவரிப்பகுதி இப்போது நிச்சயித்திருக்கிறது.

இலங்கையில் ராணுவப்பகுதியினரிடம் ஒப்பந்தவேலைசெய்தவர்களின் பெயர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தின் தொகை முதலிய விபரங்களை வருமானவரிப் பகுதியினர் இராணுவத்தினரிடம் இப்போது கேட்டிருக்கிறார்கள்.

இதுகாறும் வருமானவரி கொடுக்காமல் அரசாங்கத்தை ஏமாற்றியவர்களை அகப்படுத்தி அவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்க அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது. இவர்களிற் சிலர் சமீபகாலத்தில் அகப்பட்டு 50,000 ரூபா, 60,000 ரூபாவரை அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## அரசாங்கசபைத் தலைவரின் எதிர்ப்பு

பாராளுமன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபின், பிரதம மந்திரி முதலாம் மந்திரிகளுக்கு வாஸஸ்தலங்கள் கட்டுதற்கு 265,000 ரூபா வேண்டிப் போக்குவரத்து மந்திரி சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் ஓர் உபமான்யப் பிரேரணையை எடுத்தாண்டார். பிரேரணைக்குச் சாதகமாக 16 பேரும், பாதகமாக 16 பேரும் வாக்களித்தனர். இந்த நிலைமையில், அரசாங்கசபைத் தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி தமது மத்தியஸ்த வாக்குச் சம்மதத்தை பிரேரணைக்கு மாறாக நின்றவர் பக்கமாக அளித்தார். மான்யப் பிரேரணை தோல்வியடைந்தது.

## தவணையிடப்படலாம்

வாக்காளர் இடாப்புக்கள் முழுவதும் இன்னும் வந்து சேராதபடியினால், ஜூலை அல்லது ஆகஸ்டில் நடைபெறும் என இருந்த பாராளுமன்றத் தேர்தல், நவம்பர்மாதம் வரையில் தவணையிடப்படலாம் என்று சட்டக்காரியதரிசி சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் அறிவித்தார்.

# உணவு நிலை

## அரிசிக் கப்பல்கள் வருகின்றன

இலங்கையின் உணவுநிலை திருப்திகரமாயிருக்கிறதென்று உணவுப்பகுதி அதிகாரி ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை தெரிவிக்கிறார். இன்னும் சில நாட்களில்பிரேசிலில்இருந்து 8,241தொன் அரிசி கிடைக்கும். மார்ச்மாதம் 25ம் திகதிக்குமுன் இன்னோர் கப்பலில் 6000தொன் அரிசி பிரேசிலிலிருந்து கிடைக்கும். இவற்றைவிட பர்மாவிலிருந்தும் 7500 தொன் அரிசி கூடிய சீக்கிரம் இங்கே வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவின் நிலையும் திருப்திகரமாயிருக்கிறது என்று ஸ்ரீ ஆள்வாப்பிள்ளை தெரிவிக்கிறார். நியூ ஓர்லியன்ஸில் இருந்தும், ஆஸ்திரேலியா, அமெரிக்காவிலிருந்தும் இன்னும் சில தினங்களில் மா இங்கே இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனி, தானியவகை விஷயத்தில் திருப்திகரமான நிலையுண்டாம்.

மிளகாய், கடுகு, மஞ்சள் என்பவை இப்போது இருப்புக் குறைவாக இருக்கின்றன. சில நாட்களுக்குமுன் கல்கத்தாவிலிருந்து 500 தொன் மிளகாய் இறக்குமதியானது. பாடலிபுரத்திலிருந்தும் ஓர்தொகை மிளகாய் இன்னும் சில தினங்களில் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெங்காயம் உருளைக் கிழங்கு என்பவை போதிய அளவுக்கு உண்டு. இம்மாதம் முடிவதற்கிடையில் அந்நிய நாடுகளில் இருந்து முந்திரிகை, தோடம்பழம், அப்பிள் முதலியவை ஏராளமாக இறக்குமதியாகுமாம்.

## ஹிட்லரின் திரவியம்

ஜேர்மன் வங்கியின் இரும்பு [illegible]யில் பல்லாயிரம் பவுண் பெறுமதியான, உலோகத்திரவியம், நேசதேச அரசாங்கத்தாரால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவை ஹிட்லருக்குச் சொந்தமானவையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினமா?

## கீழ்நாட்டுச் சிங்களர் சூழ்ச்சி?

மார்ச்மீ 2ம் திகதியைச் சுதந்திர தினமாகக் கொண்டாடவேண்டும் என்று இன்று இலங்கை மந்திரசபையை வகுத்திருக்கும் ஐக்கியதேசியக் கட்சியினர் தீர்மானித்து அப்படியே சில இடங்களில் கொண்டாடினர். மார்ச்மீ 2ந் திகதி யன்றுதான் கண்டி மக்கள் தம் சுவதந்திரத்தை இழந்தனர்.

கண்டி இலங்கையின் ஓர் பகுதி மாத்திரம்தான். கண்டி மக்கள் மூன்று நூற்றுண்டுகாலமாக, பறங்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலர் என்னும் மூன்று அந்நியசாதியாரிடம் இருந்து தம் சுதந்திரத்தைப் பாதுகாக்க யுத்தம் புரிந்த காலத்தில், கீழ்நாட்டுச் சிங்களர், அவர்களுக்கு எவ்விதமான உதவியும் செய்யவில்லை, நேர்மாறுக, இந்த அந்நியசாதியாரிடம் கீழ்நாட்டுச் சிங்களர் சரண்புகுந்து அவர்கள் பக்கம் சேர்ந்து, கண்டி மக்களுக்கு விரோதமாக எத்தனையோமுறை போர்செய்தனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

1815-ம் ஆண்டுக்கு எவ்வளவோ காலத்துக்கு முந்தியே கீழ்நாட்டுச் சிங்களர் தம் சுதந்திரத்தை இழந்தனர். 1597ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி, கீழ்நாட்டுச் சிங்களப் பிரதானிகள் போர்த்துக்கீசர் முன்னல் மண்டியிட்டுத் தாள் பணிந்து, தாம் இனிப் போர்த்துக்கீஸர் பிரசைகளே என்று விவிலிய நூலின்மீது ஆணையிட்டு மல்வானு உடன்படிக்கைக்குக் கைச்சாத்திட்டனர். பின்னர் இக்கீழ்நாட்டுச்சிங்களர் போர்த்துக்கீசரின்படையிற்சேர்ந்து, கண்டி ராச்சியத்துக்கு விரோதமாகப் பல கருமங்களை ஆற்றினர். போர்த்துக்கீசர் ஆட்சி முடிய கீழ்நாட்டுச் சிங்களர் ஒல்லாந்தர் ஆட்சியில் வந்தனர். பின்னர் ஆங்கிலராட்சி நிகழ்ந்தது. இந்த மூன்று ஆட்சியிலும் கீழ்நாட்டுச் சிங்களர், கண்டி மக்களுக்கு விரோதமாகக் கருமம் ஆற்றியதைக் கண்டி மக்கள் மறக்கமுடியாது.

தம்மால் இனி நிர்வகிக்க முடியாது என்று கண்டபின்னர், கண்டி மக்கள், பிரிட்டிஷ் அதிகாரத்தை ஒப்புக்கொள்ள நேர்ந்து, அதன் பயனுகக் கண்டி உடன்படிக்கை ஏற்பட்டது, இது நிகழ்ந்ததுதான் 1815ம் ஆண்டு மார்ச்மீ 2-ந் திகதியில், உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை.

### இலங்கைத்தாயின் துக்கதினம்

திருக்கோணமலை மூத்த வெளியில் 2-3-47 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஓர் பெருங்கூட்டம் திரு. செ. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் மத்தியில் கறுப்புக் கொடிகளும் தூக்கப்பட்டிருந்தன; பேச்சு வசதிக்காக ஒலிபரப்புக் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. தலைவர் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

நாங்கள் இக்கூட்டத்தைக் கூடியுள்ளது நமது இலங்கையை பிரிட்டன் ஒப்பந்தத்துடன் அபகரித்துக் கொண்ட தினத்தை நினைவு கூருவதற்காம். இலங்கையிலுள்ள பிற்போக்கு வாதிகளாகிய ஐக்கியதேசியக் கட்சியார் இத்தினத்தைச் சுதந்திரதினமாகக் கொண்டாடும்படி விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். 1815ம் ஆண்டிலிருந்து இத்தினம் ஓர் துக்கதினமாக இலங்கையில் இருந்து வந்திருக்கின்றது. இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியின் செயல் ஓர் வெட்கக்கேட்டை உண்டாக்குகிறது. ஸ்ரீமான்கள் M. முத்துச்சாமி M. G சிரிசேன, S சைமன் சில்வா கலப்பத்தே N. திக்கிலஸ் G. L. கொத்தலாவலை முதலியோரும் சொற்பொழி வாற்றினர்கள். பின் தலைவர் நன்றியுரைகூற ஐக்கிய தேசியக்கட்சி ஒழிக என்ற பலத்த கோஷத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

---

இதற்கும் காரணம் கீழ்நாட்டுச் சிங்களர்தான் என்று கூறப்பட்டது. இதன் பயனுகக் கண்டி மக்கள் பலமுறை கலகம் விளைத்தனர். அவை யாவும் அடக்கி ஒடுக்கப்பட்டன.

நிலைமை இப்படியிருக்க, மார்ச் மாதம் 2ம் திகதி எவ்வாறு சுதந்திர தினமாக இருக்கமுடியும்? எமக்கு இன்னும் சுதந்திரம் கிட்டவில்லை. அது எப்போது கிடைக்கும் என்பது கூறமுடியாது.

மார்ச்மாதம் 2ம் திகதி சுதந்திர தினமன்று! கீழ்நாட்டுச் சிங்களர் இலங்கையை - கண்டி ராச்சியத்தை அந்நியர்க்குக் காட்டிக் கொடுத்த தினம் அது! கீழ்நாட்டுச்சிங்களர் இந்த நாட்டின் சுதந்திர வாழ்க்கைக்குக் குழி தோண்டியதினம் அது! இந்தஅக்கிரமங்களைச் செய்த அதே கீழ்நாட்டுச் சிங்களப் பிரபுக்கள் இன்று தாமே சுதந்திர புருஷர்போல, சுதந்திரதினம் கொண்டாடுகிறார்கள்.


நல்ல செய்தி!

பொய்ப்பல், சுத்திசெய்தற்கு மிக உவந்த

**கெரேடன்ற்**

எனும் உயரிய தூள்

விலை: போத்தல் ஒன்று ரூபா 2—00

**தனி ஏஜண்டுகள்**

தி. ஓவர்ஸீஸ் கம்மேர்ஷியல்

(சிலோன்) ஏஜென்ஸி லிமிற்றெட்

தபாற் பெட்டி: இல. 44

167. நோறிஸ்றோட்

கொழும்பு

M. 338—7 25-3-47


### திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

சனி மார்ச் 8

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எல் கணபதியாபிள்ளை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 8.30 காலை இசை 9 முடிவு.

1 எல் கணபதியாபிள்ளை வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆங்கிலப் பேச்சு 2-15 கே ஆனந்தா பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 எஸ் கே வெங்கடாரமணன் பாட்டு 5.40 திருவரங்கத்தந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே ஆனந்தா பாட்டு 7.15 சிராணுவத்திலிருந்து திரும்புவோருக்கு வசதிகள் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மசராஸில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9-15 குரல்வகை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே பி, தேவராஜு சாக்ஸபோன் 10 இசை வேளை 10-30 முடிவு,

ஞாயிறு மார்ச் 9

காலை 71-5 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே ஏ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவெண்காடு சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 8-30 டி ரங்கம்மாள் வீணை 9 முடிவு.

12 ஆரம்பம் 11-30 யார் இவர்? 12.40 சூர்யகாந்தி 12.45 பணக்கார எழுத்தாளன் 12.55 எனக்கு வேண்டாம் 1 மணிமலர் 1.20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வீணை வாலின் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5: டி ரங்கம்மாள் வீணை 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 தங்கக்குட்டி ரவிவர்மா பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 பத்தக விமர்சனம் 8 கே ஏ ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 8-30 தங்கச்குட்டி ரவிவர்மா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 புல்லாங்குழல் கிளாரினெட் 10 இசைவேளை 10.3 முடிவு,

திங்கள் மார்ச் 10

காலை 7.15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 கும்பகோணம் ஆர் சிவகடாக்ஷம்பிள்ளை முகவீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8.30 எம் சுலோசனு பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே சங்கரன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எஸ் கே சங்கரன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: கும்பகோணம் ஆர் சிவகடாக்ஷம் பிள்ளை முகவீணை 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சேலம் ஜி தேசிகன் பாட்டு 7.30 தமிழில்செய்திகள் 7-45 நகர சேவைகள் 8 எம் சுலோசனு பாட்டு 8.30 சேலம் ஜி தேசிகன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 இரு வயலின்கள் 10 இசைவேளை 10-30 முடிவு

செவ்வாய் மார்ச் 11

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஜானகி ஸ்ரீநிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 துறையூர் ராசகோபால சர்மா 8-30 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 9 முடிவு,

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜானகி ஸ்ரீநிவாசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஜானகி ஸ்ரீநிவாசன் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

5 பி ஆர் எஸ் மணி புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலக்கியவாசகம் 7.15 பீட்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மசராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.10 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அறிவிப்புகள் வானிலை 9.45 கே வே... 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு,

### முஸ்லீம்களுக்காய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேச விசேஷ பரீட்சை

அளுத்காமம், அட்டாளைச்சேனை தமிழ் (முஸ்லீம்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்படுதற்குத் தெரிதற்காக, கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்து அரசினர் பாடசாலை அல்லது நன்கொடை பெறும் பாடசாலையில் நன்கொடைக்குத் தகுதியுள்ள ஆசிரியராக 5 வருடத்துக்குக் குறையாத காலத்துக்குக் கடமையாற்றிய முஸ்லீம்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

2 ஆசிரிய பயிற்சிக்குத் தாம் தெரியப்படவேண்டுமென விரும்புவோர். தமது விண்ணப்பங்களைக் கீழே கொடுத்த முறையில் அவ்வப் பகுதிக்குரிய வித்தியாதிகாரிமூலமாக 1947-ம்ஆண்டுமார்ச் மாதம் 8-ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பவேண்டும்:—

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேச விண்ணப்பம்

1 முழுப்பெயர்:
2 தபால் விலாசம்:
3 கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர விவரம் (அதாவது அ)பாடசாலை (ஆ) சுட்டிலக்கம் (இ) சித்தியெய்திய வருடம்.
4 ஆசிரிய சேவை:

பாடசாலைகளின் பெயர்

... .... ... ... ....

காலம்

தொடக்கம் வரை

.... ... .... .... ....

இயன் சான்டிமன்

கொழும்பு வித்தியாதிபதி,

24—2—47

G 150 7—3—47.

---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து

### ஈழநாட்டு இளைஞர் கழகம்

அண்ணமலைப் பல்கலைக் கழகத்து இலங்கை மாணவ மாணவிகளின் இறுதி ஆண்டுப் பொதுக் கூட்டம் 1947-ம் ஆண்டு மார்ச் மாதம் 2ந் திகதி காலை பத்தரை மணிக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கழகத் தலைவர் திரு. க. கைலாயநாதன் அவர்கள் தலைமை தாங்கினர்.

தலைவர் தமது முன்னுரையில், இலங்கை மாணவ மாணவிகள் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு எய்திய சிறப்புக்களைப் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

1 சங்கீத பூஷணம் முதற் பிரிவில் தேர்வுபெற்றவர் திரு. என். சண்முகரத்தினம்,

2 இடைக்கலைச்சோதனையில் (Intermediate Exam.)

முதற்பிரிவில் முதலிடமாய்த் தேர்வு பெற்றவர்:—திருமதி மணி அருணந்தி.

3 அதே சோதனையில் முதற்பிரிவில் தேர்வுபெற்றவர். திருமதி கருணுதேவி கனகசபை,

4 பட்டமளிப்பு விழா ஆங்கில நாடகத்தில் முதற்பரிசு பெற்றவர்: திரு. பரம்தில்லைராசா.

5 பல்கலைக் கழகம் நிறுவினோர் நினைவுநாளன்று

1 தமிழ் ஆராய்ச்சி முதற் பரிசு பெற்றவர் திரு. க. கி. நடராஜன்
2 ஆங்கிலப் பேச்சுப் போட்டி முதற் பரிசு பெற்றவர் (Junior) திரு. க. கயிலாயநாதன்.
3 ஆங்கிலக் கட்டுரைப்போட்டி (Junior) முதற்பரிசு பெற்றவர்: திரு. கயிலாயநாதன்.
4 இடைக்காலச் சோதனையில் (Intermediate Exam) ஆங்கிலத்தில் முதற்பரிசு பெற்றவர்:— திருமதி மணி அருணந்தி.

5 பல்கலைக்கழக வெளியீட்டில் ஆங்கிலக்கட்டுரை முதற்பரிசு பெற்றவர்: திருமதி லீலாவதி மாணிக்கவாசகம்.

அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின்பு. பல்கலைக் கழகத்தை விட்டுப் பிரியும் மாணவ மாணவிகளுக்குப் பிரிவுபசாரம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பேர் தொன்மையானவர் என்ற மதிப்புங் கெட்டுவிடும். சீர்திருத்த மெனப்படுவது பழையனவெல்லாவற்றையும் காரணமின்றி அறவேயொழித்துவிட்டுப் புதிய விபரீதங்களுட் புகுந்துகொள்வ தென்பதல்ல, தம்பீ'' என்று கூறினர் புரோகிதர்

### "மெய்ப்பொருள் காண்பதறிவு"

"சாமி, பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவலகால வகையினனே' என்று சொல்லிக் கருமங்களைக் காலத்துக்குத் தக்கவாறு மாற்றிச் செய்தலும் மாறல்லவே; இந்தியாவிலே தீண்டாமையை யொழிப்பதற்கும், தீண்டாதாரை ஆலயங்களிற் பிரவேசிக்கச் செய்தற்கும் ஆகிய முயற்சிகளை இக்காலத்திற் செய்தே தீரவேண்டு மென்றும், இல்லாவிட்டால்இந்துக்களாயுள்ளவர்களுட்பலர் அந்நிய மதங்களிற் பிரவேசித்துவிடுவார்களென்றும் சொல்லித்தான் இந்தியத் தலைவர்கள் அம்முயற்சிகளில் தலையிட்டு உழைக்கிறார்கள்; அது நியாயந்தானே'' என்று விஜயரத்தினம் ஐயரைக் கேட்க, ஐயர் "தம்பீ, நாம் எடுத்த விஷயத்தை மறந்து, வேறு விஷயத்திலே தலையிடலானோம்; ஆனாலும் நீர் கேட்ட கேள்விக்கு நாம் அந்த சமாதானத்தைச் சொல்லிவிடுகிறேன்; சொன்னாலும் பிராமணன் தன்சாதியைப் பாதுகாத்துத்தான் நியாயம் பேசுகிறனென்று நீர் எண்ணக்கூடும்; அதையிட்டுத் தான் யோசிக்கிறேம்"என்றார் புரோகிதர்: "இல்லை, சாமி நான் உங்களைப் பற்றி அப்படி நினைக்கமாட்டேன்; எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே ஆனதால் சாமி, நீங்கள் யோசிக்கவேண்டாம்; சொல்லுங்கள்" என்றான் விஜயரத்தினம்; 'தம்பி, நாம் முந்தியே சொன்னோம்; இந்தியாவிலே செய்யப்படுவனவெல்லாம் இங்கே செய்யப்பட வேண்டியதில்லையென்று; அல்லன நீக்கி, நல்லன செய்தலே நம் நாட்டவரின் கடமை; ஒரு ஊருக்குப் பேச்சு; இன்னொரு ஊருக்கு ஏச்சாக எண்ணப்படுதலு முண்டு; இந்தியா பெரியநாடு, உலகத்திலேயுள்ள சனங்களுள் ஐந்திலொரு பங்கினர் இந்தியாவிலிருக்கிறார்களென மதிப்பிடப்பட்டிருக்கிறது: இதனாற்றான் இந்தியாவைப் பரதகண்டமென்றுஞ் சொல்லுகிறார்கள்; கண்டம் - உலகத்தின் பெரும்பிரிவு: அங்கே பலபேதமான கொள்கைகள் பாஷைகள் சமயங்கள் ஒழுக்கங்கள் தொன்மைகள் பூண்ட நாற்பதுகோடி மக்களிருக்கிறார்கள்; இந்திய நாட்டினையும் ஒரு சின்னப் பூவுலகமென்று சொல்லலாம்; அப்படிப்பட்ட பரந்த நாட்டிலே பல விவகாரங்களும் பிணக்குகளும் கொள்கை வித்தியாசங்களும் சாதிகளுக்கிடையே வேற்றுமையும் இன்னபிறவுகளும் இருத்தல் சகசமாகும் தீண்டாமை யொழித்தல், தீண்டாதார் ஆலயப் பிரவேசமென்ற முயற்சிகள் அங்கே இந்துக்களுக்கிடையில் மாத்திரம் ஒவ்வொரு நோக்கம் பற்றிச் செய்யப்படுகின்றன வென்றே எண்ணக் கிடக்கின்றது; இவைகள் அங்குள்ள அரசியல் விவகார விஷயமாக எழுந்த சீர்திருத்தமென்றுஞ் சொல்லுகிறார்கள்; ஆனால் தம்பி எங்களுடைய இந்தச் சிறியநாட்டில், ஆண்டவ னருளால் அப்படியான பிணக்குகளும், வேற்றுமைகளும், விபரீதங்களும் இல்லையென்று சொல்லலாம்; நோயுடையவனுக்கு மருந்து வேணுமேயொழிய, அவனைப் பரிகரிக்க வைத்தியன் வேணுமேயொழிய நோயில்லாதவனுக்கு மருந்தேன்? வைத்தியனேன்? எங்கள் நாட்டிலே பிராமணர் தொடக்கம் தாழ்ந்தசாதியார்வரையில் தங்களுக்கிடையே எவ்வகையான வேற்றுமை விபரீதம் பிணக்கு என்னுந் தீமைகளின்றிப் பழைய முறைகளைப் பாராட்டி ஒரு குடும்பத்தினர் போல், தாம்தாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு இனிது வாழ்கின்றார்கள்; அப்படி வாழும் போது மாறுதல்களேன்? விபரீதத்தையும் வேற்றுமையையும் விளைத்து ஐக்கியத்தைக் கெடுக்கக்கூடிய நவமான சீர்திருத்தங்களேன்? நோயுள்ளவன் மருந்தை யுட்கொண்டால், அது அவனுடையநோயைநீக்கி அவனைச் சுகப்படுத்தும், ஆனால் நோயற்றவனாகிய அரோக திடகாத்திரமுடையவன், நோயாளி மருந்து குடிக்கின்றானே தானும் அதும் மருந்தை உட்கொண்டாலென்ன என்றெண்ணி அப்படியுட்கொள்வனேல், அம்மருந்து அவனுக்கு நோயை ஆக்கிவிடுதலுங்கூடும்; அதுபோலத்தான் தம்பி இருக்கும் இந்தநாட்டிலே, இந்தியாவில் நடக்கும் சில விபரீதங்களைக் கொண்டுவந்து புகுத்தத் துணிவது" என்று கூறினார் புரோகிதர்.

"சுவாமி, சொல்லுகிறேனென்று குறையெண்ணுதீர்கள், பழமையைப்பற்றியும் பழைய ஒழுக்க வழக்கங்கள் கொள்கைகள் ஆசாரங்களைப் பற்றியும் பேசுகிறீர்கள்; அவைகளெல்லாம் தொன்மைபோல் இக்காலத்திலுங் கைக்கொள்ளப் பட்டு வந்தால் இந்த மாறுதல்களும் விபரீதங்களும் ஏற்படமாட்டா; இக்காலத்திலே மேலான சாதியினரென்றிருக்கும் பிராமணர் தொடக்கம் மிகவும் தாழ்ந்த சாதியார் வரையில் தங்கள் பிறப்பொழுக்கம் முதலானவைகளையெல்லாம பெரும்பாலுங் கைவிட்டுத் தலைதடுமாற்றமாக நடக்கிறார்கள்; இதனாற்றானே, சாமி இந்த மாறுதல்கள் நேரலாயின வென்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்களென்று நினைக்கிறேன்" என்றான் விஜயரத்தினம்; வேதியர் 'தம்பி, நீர் சொல்வது முழுவதும் நிசம்; எங்கள் சாதியினர் தொடக்கம் எல்லாச்சாதியினருள்ளும் பெரும்பாலார் தங்கள் ஒழுக்கங்களை விட்டுவிட்டார்களென்பது அதனாற்றான் இந்த விபரீதங்களெல்லாம் நேரலாயின வென்பதும் உண்மை; நாம் பிராமணனாயிருந்தாலும் சாதியபிமானமென்ற காரணத்தினாற் பட்சபாதமாகப் பேசும் இயல்பு பூண்டுள்ளோம்; கற்றவர் விஷயமறிந்தவர்கள் சாதியி லுயர்ந்தவர்கள் மற்றையோருக்கு உபதேசஞ்செய்து அவர்களை நல்ல நெறியிலே நடத்தவேண்டிய கடமை பூண்டவர்கள் தவறு செய்தால், அத்தவறு நாற்சந்தியிலுள்ள தீபம்அவிந்ததுபோலிருக்கும். அத்தீபம் அவிந்தமை எல்லாராலும் அவதானிக்கப்படும்; அதுபோலவே பெரியோர்செய்யும் பிழைகளைஎல்லாரும்எடுத்துப்பேசுவார்கள்; வீட்டின் அறையிலுள்ள தீபம் அவிந்தால் அவ்வீட்டி லிருப்போரிலுஞ் சிலர் அது அவிந்தமையை அறியாதிருத்தல்கூடும்; அப்படித்தான் படியாத சாமானியர் செய்யுந் தவறு பலரால் அறியப்படாது, பெரிதெனக் கொள்ளப்படாது இருக்கும்.

# பாஞ்சாலத்திற் கலகம்

## சீக்கியர் ஹிந்துக்களின் கிளர்ச்சி

பாஞ்சாலத்தில் சேர் மாலிக் கிஸிர் ஹையத்கானுடைய மந்திரசபை பதவியைவிட்டுவிலகியபின், முஸ்லிம்லீக் பதவிஏற்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால் தனியே லீக்கரால் மந்திரசபையை அமைத்து நடத்தமுடியாது அவர்கள் காங்கிரஸ் சீக்கியர் என்பவர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். இதற்கிடையில் ஜின்னா பாஞ்சாலத்தில் முஸ்லிம் லீக்கர் பதவி ஏற்கப் போவதைப் பாராட்டி ஓர் செய்தி விடுத்திருக்கிறார். இப்படியே முஸ்லிம் மாகாணங்களில், லீக் மந்திரசபை ஏற்பட்டால், பாகிஸ்தான் கிடைத்த மாதிரியாய்விடும் என்று அவர் அவ்வறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறார்.

இது இவ்வாறாக, லீக்கரின் பாகிஸ்தான் கொள்கைக்கு ஓர்போதும் இணங்கமுடியாது என்றும் லீக்கரின் சர்வாதிகாரத்துக்கு அடங்கி நடக்கமுடியாதென்றும், பாஞ்சாலத்திலுள்ள ஹிந்துக்களும் சீக்கியரும் கிளர்ச்சிசெய்து வருகிறார்கள். மூல்த்தான், அமிர்தசரஸ், லாகூர் என்னும் இடங்களில் கடந்த சில தினங்களாக, சீக்கியர் ஹிந்துக்கள் ஓர் பக்கமாயும், முஸ்லிம்கள் ஓர்பக்கமாயும் கலகம் நடைபெற்றதாகவும் பலர் மாண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. நிலைமை இன்னுஞ் சீர்ப்படவில்லை. பாஞ்சாலத்துப் பரிபாலனத்தைத்தேசாதிபதி தற்காலிகமாக மேற்கொண்டிருக்கிறார்.

●

### குட்டிக்கரணம் போடுகிறார்

மகாத்மாகாந்தி கிழக்கு வங்காளத்தில் தங்கிநிற்கவொண்ணாது என்று பிரசாரம் புரிந்து வந்த, பழைய வங்கப் பிரதம மந்திரி ஜனாப் பஸ்லுல்ஹக், காந்திஜியைச் சந்தித்தபின், இன்னோர் குட்டிக்கரணம் போட்டுவிட்டார். கிழக்கு வங்காளத்தில் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காந்திஜி செய்து வரும்சேவை, உண்மையில் பாராட்டுதற்குரியது" என்று மிஸ்ரர் பஸ்லுல் ஹக் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். "காந்திஜி புரிந்துவருவதுபோல் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவகுப்பினரிடையேயும் நல்லெண்ணத்தைப் போதிப்பதிலேயே எனது வாழ்க்கையின் மிகுந்த பகுதியையும் செலவிட எண்ணுகிறேன்" என்றும் மிஸ்ரர் ஹக் கூறுகிறார்.

### பெற்றார்தினக்கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும்

அச்சுவேலி சரசுவதி வித்தியாசாலையில் ஷை கொண்டாட்டம் சென்ற வியாழக்கிழமை (27-2-47) மாலை 7 மணிதொடக்கம் Dr. S சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்களை மேள வாத்தியத்துடன் அழைத்து வந்து மாலையிட்டபின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவரவர்கட்கு மேற்படி வித்தியாசாலை ஆசிரியரொருவரால் வரவேற்பு வாசித்தளித்தபின், மாணவிகளால் வந்தனோபசாரப் பாட்டுப் பாடப்பட்டது. பின் தலைமை ஆசிரியர் அறிக்கைப் பத்திரம் வாசித்தார். அறிக்கையில் வித்தியாசாலை வளர்ச்சி, மாணவர் ஆசிரியர் தொகை, புதிய கட்டிடத்தின் அவசியம் ஆதியவற்றைப்பற்றிக் கூறப்பட்டிருந்தது பாடசாலைச் சிறுமியர்களால் "கண்ணம்மா" என்னும் விஷயம் பேசப்பட்டபின், பிள்ளைகள் யோகாசனங்கள் காட்டியும், ஆங்கிலப்பாக்கள் படித்தும் நடனங்கள், கும்மிகள் ஆதியன செய்தும் சபையோரை மகிழ்வித்தனர். தலைவரவர்களாற் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்னர் உபதலைவர் திரு. S. கனகநாயகமவர்கள் பாடசாலையைப்பற்றியும் மனேஜரைப்பற்றியும் குறிப்புக்கள் கூறினர். ஸ்ரீS. N. இராசதுரை யவர்கள் குறிப்புரை கூறினர். தலைவர் தமது முடிப்புரையில் பாடசாலை வளர்ச்சியைப்பற்றிக் கூறினர், பின் பாடசாலை மாணவர்களால் ஸ்ரீ வள்ளி நாடகம் நடிக்கப்பட்டது நியாயதுரந்தரர் S. இராசரத்தினம், வித்தியாதரிசி E. அருளம்பலம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை, திரு முதலியார் சபாரத்தினம், திரு. C. நாகையா ஆதியோர் சமுகமளித்துச் சபையைச் சிறப்பித்தனர். —நிருபர்

### "தோற்றத்தை மாத்திரம் நம்பக்கூடாது"

நுவரெலியாவில் லோசன் தெருவிற் கடைவைத்திருக்கும் M. S. எட்மண்ட் என்னுமொரு வியாபாரி கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக மிளகாய் விற்றாரென்னுங் குற்றச்சாட்டின்பேரில் அங்குள்ள நீதித்தலத்தில் விசாரணையின் பின் குற்றவாளியெனக் கண்டு ஆறுமாசகாலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார் தண்டனைவிதிக்கும்போது, குறித்த நீதிபதி "இந்த எதிரியோ பெரிய சண்டியனென்பது ஆளைப்பார்க்கவே புலப்படுகிறது" என்ற குறிப்புங் கூறியுள்ளார்; எதிரி மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் (அப்பீல்) செய்திருந்தார். அங்கே தலைமை நீதியரசராகிய ஸேர் ஜோன் ஹெள்வாட் என்பவர் எதிரியின் சிறைக்காலத்தை 4 மாசமாகக் குறைத்துத் தீர்ப்புச் செய்தபோது எதிரி சாட்சிக் கூட்டில் நின்றபோது சொல்லியவையேனுஞ் செய்தவையேனும் குறித்த குற்றவாளியை ஒரு சண்டியன்போலப் புலப்படச் செய்ததென்று கீழ் நீதிஸ்தல நீதிபதி சொல்லாமல், அவ்வெதிரியின் தோற்றத்தை மாத்திரம் பார்த்து அதிக தண்டனை விதிப்பது முறையல்ல. என்ற குறிப்பையுங் கூறியுள்ளாராம்.

### கொழும்புத் தமிழ்க் கழகம்

திருவள்ளுவர் திருநாள் நிசமும் விய வருடம் மாசிமாதம் 5ந் திகதி (9-3-47) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மண்டபத்தில் உணவுப்பொருட் பகுதித் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும்.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானுல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் படும்பாடு

முற்றொடர்

தமிழ்ப்புலவோர் தம்மைப் பீடித்துள்ள அச்சத்திற்கு விடைகொடுத்தனுப்பினல் மட்டுமே அவர் நிலை உயர்வதாகும். ஆங்கிலம் படித்தவர்களுக்கு அஞ்சுந் தமிழறிஞர்களும் உளர். நீதிக்குப் பயந்து வாழுதலன்றிப் பிறிதெவர்க்கும் அஞ்சாத நிலையெய்துவனேல் தமிழனின் வாழ்க்கை திருந்தும்.

தமிழ் அறிஞர்கள் தம் பண்டைச் சான்ளுேர் சென்ற நெறிகளை யாராய்ந்து அவை விழுமியவாகக் காண்டலின் அந்நெறி கடவாதொழுகி எமது வாழ்க்கையைச் சீர்திருத்தி எதிர்காலத் தமிழனின் வாழ்க்கைக்கு வழிகோலுவாராக."

ஸ்ரீபாரதிபேசிமுடித்ததன்பின்னர் இத்தமிழ்மன்றத்தில் வித்துவான் க. வேந்தனர்அவர்களும் திரு. V. J. யோன்பிள்ளைஅவர்களும்வித்துவான்செல்லக்குருக்களவர்களுஞ் சொற்பொழிவாற்றினர்கள். திரு. யோன்பிள்ளையவர்கள் தமிழருங் கலையுணர்ச்சியும் என்னும் பொருள்பற்றிப் பேசிய போது கந்தபுராணத்தின் சொற்சுவை பொருட்சுவைகளையுங் குறிப்பிட்டார்கள். இராமாயணத்திலும் தம்முள்ளங் கவர்ந்த படலம் வாலிவதைப் படலமே யெனக் குறிப்பிட்டுக் கூறுகையில்,

"நூலியற்கையும் நுங்குலத்
துந்தையா
போரியற்கையுஞ் சீலமும் போற்
றலை
வாலியைப் படுத்தாயலை மன்னற
வேலியைப் படுத்தாய் விறல்
வீரனே"

என்ற செய்யுளை எடுத்துக்கூறி வாலியின் திட்பமான கூற்றையும் இராமன்மேற் குற்றஞ்சாட்டிய முறையையும் கம்பன் கவித்துவத்தையும் வியந்துபேசினர்கள். இதற்குக் குறிப்புரையாகத் தலைவர் தம்முரையிற் கூறியதாவது:—

கம்பன், காசில் கொற்றத்திராமன் கதையென நுதலிப் புகுதலின் இராமன் குற்றமற்றவனுதல் பெறுதும் இருபெருவேந்தர் பொருதுழி ஒருவன்மேல் மறைந்துநின்று பகழி தூவலும் உயிர்கோடலும் நெறியன்று. பின்னை உரைக்குமாறென்னெனிற் கூறுதும். வாலியொடு சுக்கிரீவன் பொரச் சென்றுழிச் சுக்கிரீவனே சேனைத் தலைவனுகச் சென்றுன். சேனைத் தலைவன் கூறியாங்குச் செயலாற்றலே சேனையிலமைந்தான் கடன். இவ்வுண்மையை இன்றைய யுத்தங்களினுங் காணலாம், தாடகையைக் கொல்லற்கு இராம இலக்குமணர்களை அழைத்துச் சென்றகாலை விசுவாமித்திரனே இராம இலக்குமணருக்குத் தலைவனுகச் சென்றுன். விசுவாமித்திரன் தாடகையைக் கொல்லச் சொல்லியபோது இராமன் அவள் பெண்ணுகவிருக்கின்றுளே. எங்ஙனம் அம்பு தொடுப்பேனென எண்ணினுன். பின்னர் தலைவன்சொற்படி செய்தலே தக்கதென வுணர்ந்து அம்பு தொடுக்கிறுன்,

"அய்யனங்கது கேட்டற னல்லவுஞ்
எய்தினலது செய்கவென் றேவி
னல்
மெய்யநின்னுரை வேதமெனக்
கொடு
செய்வதன்றோ அறஞ்செய்யு மா
றென்றுன்."

என்ற செய்யுள் இவ்வுண்மை தெரிக்கிறது. தலைவன் கற்பித்தாங்கு செய்தலே அவனுக்கமைந்தான் செயற்பாலது. சுக்கிரீவன் சேனைத்தலைவனுக நின்று இராமனைப் பார்த்து வாலியை மறைந்துநின்று கொல்லெனப் பணித்தான். தலைவன் பிழைபடச்சொன்னுலும் அவன் சொற்படி செய்தலே அறஞ்செய்யுமாருதலால் இராமன் அவ்வாறு மறைந்து நின்று வாலியைக் கொன்றுன். இராமனை மனிதனுக வைத்துப் பார்க்கின்றுழியும் உண்மை இதுவாகலின் இராமன் மாசில் கொற்றத்தவனுயினுன். அவ்வாறன்றித் தெய்வமாக வைத்துப் பார்த்தாலும் முன்னர் தேவர்களுக்கு அபயங் கொடுத்தாங்கு வாலியின் குரங்குவடிவத்தை நீக்கி அவனுக்கு நற்பதங்கொடுத்தானென உணர்க.

## காணிவிற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்
வழ. இல. D. 154.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் கட்டளைப்படி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லிரோட்டில், புகைரதஸ்தானம், நீதிஸ்தலங்கள், பெரியகடை என்பவற்றுக்குச் சமீபமாகவுள்ள, பின்விபரிக்கப்படும் விஸ்தாரமான சகல வசதிகளோடும் கூடியவீடும் காணியும், விற்பனைக் கிருக்கிறது. இக் காணியை வாங்க விரும்புவோர், இவ் விளம்பரப் பிரசுரத் திகதியி லிருந்து மூன்று வாரத்துக் கிடையில் தாம் கொடுக்க விரும்பும் விலைவிபரத்தை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கிடுத்தாருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

காணிவிபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணர்பண்ணை கோவிற்பற்று வண்ணர்பண்ணை கிழக்கிறை "பானன்காடு" நிலைப்பரப்பு (4) நாலும் கல்வீடும் தலைவாசலும் கிணறும் வெளிவீடுகளும் மதிலும் அடுக்களையும் பனை செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கிருஷ்ணன்செட்டி கோபாலச் செட்டியின் ஆதனம், வடக்கு கந்தையா ஆறுமுகத்தி னுதனமும், மேற்கு றயில்றோட்டு, தெற்கு வேலுப்பிள்ளை நாகரத்தினம் பெண் கண்மணிக்கும் வயித்திலிங்கம் தியாகராசா பெண் சின்னம்மாவுக்கும் உரிய ஆதனம், இதில் கிணற்றில் வடக்குக் காணிக்குரிய மூன்றிலொரு பங்கு நீக்கி இவ்வெல்லைக் குட்பட்டவைகள் அடங்கலும்.

Mis 335, 4—7-3-47,

## பெயர் மாற்றம்

வல்வெட்டித்துறை, வல்வெட்டி வாசியாகிய முருகர் முத்தையன் என இதுகாறும் அழைக்கப்பட்டு வந்த யான், 1946ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12-ந்திகதி முடித்த சத்தியக் கடதாசிப்படி முருகர் சின்னையா எனப் பெயர்மாற்றி இருக்கிறேன் என்றும், அவ்வாறே சகல சாதனங்களிலும்இனிக்கையொப்பம்இடுவேன் என்றும் இத்தால் அறிவிக்கிறேன்.

வல்வெட்டி இப்படிக்கு
வல்வெட்டித்துறை மு. சின்னையா
1—3—47

Mis 4—7-3-47

## பொதுநல சேவைப்
## பகிரங்கக் கூட்டம்

23-2-47 அன்று சரவணை "தமிழ் இளைஞர் காங்கிர"சினரால் நாகேசுவரி வித்தியாசாலையில் ஓர் பொதுநலசேவைப் பகிரங்கக்கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம் மேற்படி கிராம மயானத்தில் ஓர் மடம் கட்டுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு அதை நிறைவேற்றுவதற்கென ஓர் காரியசபை நிறுவப்பட்டது. பின்னர் மேற்படி கிராமத்திற்கு மிக அத்தியாவசியமானதும் சிதைந்துபோனதுமான பாலத்தைத் திருத்தித் தரும்படி போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்வதெனவும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீ இ. மருதையனர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.


## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis.25 23-4-46 to 22-3-47)

## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைததுக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11-46—30-4-47 (வெ)

விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

## NEW IRON SAFES FOR SALE
## புதிய இரும்புப் பெட்டிகள்
விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13.12.45—12-3-47

## இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, March, 7, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org